DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 130/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**A1 to A3 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ரகுராம்ஷர்மா |
| Father / Husband Name | ராமச்சந்திரன் |
| Village | திருவள்ளூர் |
| Taluk | திருவள்ளூர் |
| Age | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **11.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கசவநல்லாத்தூரில் வசித்து உளவியல் வல்லுநராக இருந்து வருகிறேன். நான் gaurakshadal tamil nadu என்ற அமைப்பில் நான் நிறுவனத்தில் தலைவராக உள்ளேன். மேற்படி அமைப்பு இந்திய விலங்குகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டது. கடந்த 10.07.2024 ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு KA 51 AG 7777 என்ற பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரி வாகனத்தில் மாடுகள் சட்டவிரோதமாக ஏற்றி ஆந்திராவில் இருந்து திருச்சி நோக்கி செல்வதாக எனக்கு போன் மூலம் ஒரு ஆண் நபர் தகவல் தெரிவித்தார். நான் தகவல் கிடைத்தவுடன் எனது காரில் புறப்பட்டு மேல்மருவத்தூர் தாண்டி வரும்போது மேற்படி வாகனத்தை நான் அடையாளம் கண்டேன். பின்னர் உடனே 100 க்கு கால் செய்து போலிசாருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர் தேன்பாக்கம் ஜங்ஷன் அருகே போலிசார் patrol பணியில் இருந்தார்கள். நான் மேற்படி patrol பணியில் இருந்த காவலர்களிடம் மேற்படி வாகனத்தை குறித்தும் அதில் மாடுகளை சட்டவிரோதமாக ஏற்றி செல்வது குறித்தும் தெரிவித்தேன். மேற்படி இடத்திற்கு 100 மூலம் தகவல் தெரிவித்த போலிசாரும் வந்துவிட்டார்கள். பின்னர் மேற்படி வாகனத்தை நிறுத்தி அதன் ஓட்டுநரிடம் போலிசார் வாகனத்தின் உள்ளே என்ன உள்ளது என்று விசாரித்தபோது அதன் ஓட்டுநர் வாகனத்தின் உள்ளே 45 எருமை மாடுகள் இருப்பதாக சொன்னார். மேற்படி வாகனம் மூடியிருந்ததால் காவலர்கள் உடனே வாகனத்தின் மேல் ஏறி புகைப்படம் எடுத்தார்கள். மேற்படி வாகனத்தின் உட்புறம் இரண்டு அடுக்குகளாக பிரிக்கப்பட்டு எருமை மாடுகள் கட்டப்பட்டு முகம் மட்டும் வெளியில் தெரியுமாறு இருந்ததை நான் மேற்படி புகைப்படத்தில் பார்த்தேன். மேற்படி எருமை மாடுகள் உணவு மற்றும் தண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமல் காற்றோட்டம் இல்லாமலும் கட்டப்பட்டு இருந்தன. மேற்படி வாகனத்தில் எருமை மாடுகள் ஒன்றோடு ஒன்று உரசிய நிலையில் இருந்ததால் மேற்படி எருமை மாடுகளின் எண்ணிக்கை சரியாக தெரியவில்லை. ஆனால் சுமார் 60 மேல் எருமை மாடுகள் இருந்திருக்கும். அதன் பின்னர் நான் அங்கிருந்து புறப்பட்டு அச்சிறுபாக்கம் காவல் நிலையத்திற்கு

சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** போலிசார் சம்பவயிடத்தில் எத்தனை மாடுகளை கைப்பற்றினார்கள் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியுமா என்றால் போலிசார் மேற்படி வாகனத்தில் இருந்து எருமை மாடுகள் இறக்கும் போது தான் குறிப்பிட்டு அதன் எண்ணிக்கையை சொல்ல முடியும் என்று சொன்னார்கள். 60 க்கு மேல் இருக்கலாம் என்று சொன்னார்கள். புகாரை நான் மாலை 7.30 முதல் 8.00 மணிக்குள் சம்பவதினத்தன்றே கொடுத்தேன். புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். புகார் மற்றும் போலிசார் விசாரணையில் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தையும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகாரில் போலிசார் எந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அதன் படி போலிசார் வழக்கு பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். முதல் தகவல் அறிக்கை புகார் கொடுத்த அடுத்த நாள் வாங்கினேன். பட்டியல் சாட்சி 2 கார்த்திக் மற்றும் சாட்சி 3 ராஜசேகர் ஆகியோர் எங்கள் அமைப்பில் உள்ளவர்களா என்றால் ஆமாம். நான் வசிக்கும் இடத்தில் இருந்து ஆந்திரா சுமார் 60 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். போலிசாரிடம் புகார் கொடுத்தார் அவர்கள் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்பதால் என்னிடம் தகவல் தெரிவத்தார்கள் என்றால் சரியல்ல. அரசுத்துறை அதிகாரிகள் மேற்படி நடவடிக்கைகளை கண்காணித்தால் எங்கள் நிறுவனத்திற்கு சேவை இல்லை என்றால் சரிதான். ஆந்திராவில் இருந்து மாடுகள் கேரளாவிற்கு கடத்தப்படுவது வழக்கம் என்றால் சரிதான். நான் தன்னார்வளர் என்பதால் புள்ளிவிவரத்திற்காக புகார் அளித்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R. [signature]

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

[signature] 11/11/25

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 130/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**A1 to A3 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கார்த்திக் |
| Father / Husband Name | ஜெயபால் |
| Village | கடம்பத்தூர் |
| Taluk | திருவள்ளூர் |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **11.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கடம்புத்தூரில் வசித்து பழக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 10.07.2024 ம் தேதி நான் gaurakshadal tamil nadu என்ற இந்திய விலங்குகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பில் உறுப்பினராக உள்ளேன். மேற்படி அமைப்பில் உள்ள மாநிலத்தலைவர் அசா1 என்னிடம் ஆந்திராவில் இருந்து திருச்சி நோக்கி செல்லும் KA 51 AG 7777 என்ற பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரில் மாடுகளை சட்டவிரோதமாக ஏற்றி செல்வதாக தகவல் கிடைத்ததாக சொன்னார். நான் அசா1 மற்றும் ராஜசேகர் ஆகியோருடன் மேற்படி சாலை வழியாக மேற்படி வாகனத்தை நேரில் காண்பதற்காக சென்றபோது தேன்பாக்கம் ஜங்ஷன் அருகே போலிசார் மேற்படி வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் 45 க்கும் மேற்பட்ட எருமை மாடுகள் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொண்டு காலில் கட்டப்பட்டு இரண்டு அடுக்குகளாக பிரிக்கப்பட்டு மேற்படி வாகனத்திற்குள் இருந்ததாக மேற்படி போலிசார் சொன்னார்கள். நானும் மேற்படி வாகனத்தின் மேல் ஏறி எருமை மாடுகளை பார்த்தேன். பின்னர் காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்றோம். புகாரை அசா1 கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். தன்னார்வளராக வேலை செய்வதற்கு சம்பளம் யார் கொடுப்பார்கள் என்றால் எனது சொந்த செலவில் செய்கிறேன். சம்பளம் யாரும் கொடுப்பதில்லை. எங்கள் அமைப்பிற்கு எவரேனும் பணம் கொடுப்பார்களா என்றால் இல்லை. ஆந்திராவில் இருந்து கேரளாவிற்கு வழக்கமாக மாடுகள் ஏற்றி செல்லப்படுகிறது என்றால் சரிதான். எங்களுக்கு தகவல் கிடைக்கும் சமயத்தில் நாங்கள் சென்று அது பற்றி புகார் கொடுப்போம். நாங்கள் புகார் அளித்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். மாடுகளை ஏற்றி செல்வோர் எங்களுக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் நாங்கள் புகார் அளிப்போம் என்றால் சரியல்ல. வாகனத்தில் ஏறி எருமை மாடுகளை பார்த்தது போட்டோ எடுத்த விவரத்தை

J. Karthik.

போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். அவசர உதவி எண்ணிற்கு யார். தகவல் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். வாகனத்தை கைப்பற்றிய பின்னர் தான் அசா1க்கு நான் தகவல் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். கைப்பற்றப்பட்ட மாடுகளுக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் மேற்படி மாடுகளை கோசாலையில் விடுவதாக போலிசார் தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை மாலை 7.00 முதல் 8.00 மணிக்குள் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் எத்தனை மாடுகள் இருந்தது என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. 45 மாடுகள் இருந்ததாக மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் சொன்னதாக சொல்லியுள்ளேன். மேற்படி மாடுகளை கைப்பற்றும் போது நான் சம்பவயிடத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன். யார் முன்னிலையில் வாகனம் கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் கொடுப்பதற்கு முன்னதாகவே அச்சிறுபாக்கம் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவசர உதவி எண் 100 க்கு தகவல் சொன்னதால் வந்தார்கள். மேற்படி போலிசார் தான் வாகனத்தை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 3 நபர்கள் இருந்தார்கள். புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது அளிக்கப்பட்ட பொய் புகாரில் நான் போலிசாருக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

J. Karthik.

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 130/2025
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**A1 to A3 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராஜசேகர் |
| Father / Husband Name | முருகன் |
| Village | KADAMBATHUR |
| Taluk | TIRUVALLUR |
| Age | 34. |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **11.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கடமத்தூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் gaurakshadal tamil nadu என்ற இந்திய விலங்குகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பில் உறுப்பினராக உள்ளேன். 10.07.2024 ம் தேதி மேற்படி அமைப்பின் மாநிலத்தலைவர் அசா1க்கு ஆந்திராவில் இருந்து கேரளாவிற்கு மாடுகளை கண்டெய்னர் லாரியில் சட்டவிரோதமாக கடத்தி செல்வதாக தகவல் கிடைத்ததாக அசா1 என்னிடம் சொன்னார். நான் அசா1 மற்றும் அசா2 உடன் மேற்படி வாகனத்தில் நேரில் பார்ப்பதற்காக நாங்கள் மூவரும் சென்றபோது தேன்பாக்கம் ஜங்ஷன் அருகே ரோந்து பணியில் ஈடுப்பட்டிருந்த போலிசார் மேற்படி வாகனத்தை விசாரித்துக் கொண்டிருந்தனர். அசா1 கண்டெய்னர் லாரியின் ஓட்டுநரிடம் மேற்படி வாகனத்தில் என்ன உள்ளது என்று கேட்டபோது அதில் 45 எருமை மாடுகள் உள்ளன என்று கூறினார். அசா1 உடனே அவசர உதவி எண் 100 க்கு அழைத்து போலிசாரிடம் மேற்படி தகவலை சொன்னார். பின்னர் அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் இருந்து இரண்டு போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து எங்களை காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு கூறினார்கள். பின்னர் காவல் நிலையத்தில் அசா1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். மாடுகளையும் வண்டியையும் பார்த்த பிறகு தான் அவசர உதவி எண் 100 க்கு போன் செய்தோம் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் ரோந்து பணியில் இருந்தத காவல் துறையினர் மேற்படி வாகனத்தை நிறுத்தி பேசிக்கொண்டு இருந்த விவரத்தை நான் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து சம்பவதினத்தன்று மாலை சுமார் 7.00 முதல் 8.00 மணிக்கு விசாரித்தார்கள். சம்பவயிடத்தில் பொது மக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் எங்களை தவிர்த்து சுமார் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அசா1 தகவல் சொன்னவுடன் நான் எங்கிருந்து புறப்பட்டேன் என்றால் நான் எனது வீட்டில்

ஒப். Rajasekar.

இருந்து புறப்பட்டு சம்பவயிடத்திற்கு சுமார் மாலை 4.30 மணிக்கு சென்றேன். எங்கள் அமைப்பில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் நான் பணி புரியும் நிறுவனத்தில் இருந்து மாதம் 20000/- சம்பாதிக்கிறேன். அசா1 க்கு சொந்தமான வாகனத்தில் சம்பவயிடத்திற்கு வந்தோம். நான் நீதிமன்றத்திற்கு அசா1 ன் ford endeavour என்ற வாகனத்தில் வந்துள்ளேன். நான் தன்னார்வாளராக வேலை செய்வதற்கு சம்பளம் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. புள்ளி விவரத்திற்காக புகார்தாரர் அளித்துள்ள பொய் புகாரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.II
Madurantakam